செய்தி வெளியீடு எண் : 280 நாள் : 10.02.2023

**செய்தி வெளியீடு**

ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி–09ம் தேதியன்று கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தினம் அனுசரிக்கப்படுவதை முன்னிட்டு தமிழ்நாடு முழுவதும் கொத்தடிமைத் தொழிலாளர்களை கண்டறிந்து அவர்களை மீட்டெடுத்து மறுவாழ்வு அளிக்க நடவடிக்கை எடுக்குமாறு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமை செயலாளர் திரு. நசிமுத்தின், இ.ஆ.ப., அவர்கள் உத்தரவிட்டார். இதனடிப்படையில் சென்னை மாவட்டத்தில், சென்னை வடக்கு வருவாய் கோட்டாட்சியர் திரு. ரங்கராஜன், சென்னை முதல் வட்ட தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) திருமதி அ. ஜெயலட்சுமி ஆகியோர் தலைமையில் குழு ஒருங்கிணைக்கப்பட்டு எடப்பாளையம் பகுதியில் உள்ள தங்கம் மற்றும் வெள்ளி நகை செய்யும் பட்டறைகளில் 07.02.2023 அன்று கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி ஆய்வின் போது மேற்குவங்காளத்தைச் சேர்ந்த 22 தொழிலாளர்கள் கொத்தடிமைத் தொழிலாளர்களாகவும், சென்னையைச் சேர்ந்த 1 வளரிளம் பருவ தொழிலாளரும் அங்கு பணியிலிருந்தது கண்டறியப்பட்டு மீட்கப்பட்டனர். வருவாய் கோட்டாட்சியரின் விசாரணையின் போது இவர்கள் இடைத்தரகர் மூலமாக முன் பணம் கொடுத்து அழைத்து வரப்பட்டு 12 மணி நேரத்திற்கும் மேலாக வேலை வாங்கப்படுவதாகவும் வாரத்திற்கு ரூ.300/– முதல் ரூ.500/– வரை மட்டுமே கூலியாக வழங்கப்படுவதாகவும் தெரியவந்தது. எனவே வருவாய் கோட்டாட்சியர் மூலம் மீட்கப்பட்ட 22 கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கும் விடுதலைச் சான்று (Release Certificate) வழங்கப்பட்டது. அவர்களுக்கான உடனடி நிவாரணத் தொகை வழங்குவதற்கு வங்கிக் கணக்குகள் துவங்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வாறு கொத்தடிமைத் தொழிலாளர்களை பணியில் அமர்த்துவோருக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனையும், ரூ.2000/– அபராதமும் விதிக்க கொத்தடிமைத் தொழிலாளர் முறை (ஒழித்தல்) சட்டம் 1976–ன் கீழ் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், 18 வயது நிறைவடையாத குழந்தை/ வளரிளம் பருவத்தினரை இத்தகைய ஆபத்தான பணிகளில் ஈடுபடுத்துவோருக்கு குழந்தை மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1986-ன் கீழ் ரூ.20,000/- முதல் ரூ.50,000/- வரை அபராதமும் அல்லது 6 மாதங்களுக்கு குறையாமல் மற்றும் 2 ஆண்டுகள் வரை சிறை தண்டனையும் அல்லது இவை இரண்டும் சேர்ந்து விதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இனிவரும் காலங்களிலும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட கண்காணிப்பு குழு மற்றும் மாவட்ட தடுப்பு படையினரால் தொடர்ந்து கூட்டாய்வுகள் மேற்கொள்ளப்படும் எனவும், தமிழ்நாட்டினை கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் குழந்தைத் தொழிலாளர்கள் இல்லாத மாநிலமாக உருவாக்குவதற்கு தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் முதன்மைச் செயலாளர்/ தொழிலாளர் ஆணையர் திரு. அதுல் ஆனந்த், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in